விலை சதம் 5

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A கட்டாரத் தெரு கொழும்பு.

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

உங்கள் தேவைக்கான
சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள், பால் உணவுகள், டின் ஆகாரவகைகள் இங்கிலிஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதானமான விலையில் கிடைக்கும்.
கே. எம்
அரிசிமியாப் பிள்ளை & சன்ஸ்,
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
Phone: 3411
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
தாமரைக்கும் குடியல்லேம்

சுதந்திரன் | கொழும்பு, சரவஸ்தி வருஷம் கார்த்திகை 8உ ஞாயிற்றுக்கிழமை | Colombo, November, 23 1947 | மகாவீர 1947 முஹர்ரம் பிறை 9 | தொகுதி 73

சாம்ராஜ்யப் பாதுகாப்புக்கு இலங்கை முதலாவது பலிகடா!

காமன்ஸ் சபையில் இலங்கை சுதந்திர மசோதா இரண்டாவது தடவை வாசிக்கப்பட்டு நிறைவேறியது

"சிறுபான்மை தமிழரிடம் சிங்களவர் நியாயமான முறையில் நடந்துகொள்ள வேண்டும்"

லண்டன், நவ. 21

இன்று காமன்ஸ் சபையில் இலங்கை சுதந்திர மசோதா இரண்டாவது தடவையாக வாசிக்கப்பட்டு நிறைவேறியது. எல்லாக்கட்சியினரும் மசோதாவை ஆதரித்தனர்.

எதிர்க்கட்சி சார்பாகப் பேசிய கேப்டன் காம்மன்ஸ் இலங்கையிலுள்ள சிங்களவர்கள் சிறுபான்மையோரான தமிழர்கள் விஷயத்தில் மிகவும் நியாயமான முறையில் நடந்துகொள்ள வேண்டுமென்றும் நிர்வாகத்தில் மட்டுமல்ல, அதிகாரத்திலும் பொறுப்பிலும் தமிழர்களுக்குப் போதிய பங்கு அளிக்க வேண்டுமென்றும், இலங்கையில் கம்யூனிசத்தால் அபாயம் ஏற்படக்கூடிய நிலைமை இருந்து வருகிறதென்றும் தெரிவித்தார்.

பாதுகாப்பு ஒப்பந்த சம்பந்தமாக ஏற்பட்ட சந்தேகவினாக்களுக்கு குடியேற்றநாட்டு உதவி மந்திரி பதிலளித்த போது, யுத்தம் ஏற்பட்டால் சாம்ராஜ்யத்தைப் பாதுகாக்க வகுக்கும் திட்டத்தில் இலங்கைதான் முதல் ஸ்தானம் வகிக்குமென்று தெரிவித்தார்.

லண்டன், நவ. 21

இன்று காமன்ஸ் சபையில் இலங்கை சுதந்திர மசோதா இரண்டாவது தடவையாக வாசிக்கப்பட்டது. அம்மசோதாவின்படி சுதந்திர நாட்டைப் போல இலங்கைக்கு பிரிட்டிஷ் சர்க்கார் பிரிட்டிஷ்சாம்ராஜ்யத்திற்குட்பட்ட பூரண பொறுப்பாட்சி வழங்குவதை எல்லா அரசியல் கட்சியினரும் ஏகமனதாக வரவேற்றார்கள்.

பிரிட்டிஷ் குடியேற்றநாட்டு மந்திரி இலங்கை சுதந்திர மசோதாவை இரண்டாவது தடவையாகப் பிரேரிப்பித்துப் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:—

இந்த மசோதாவில் சிலபகுதிகளில் வெஸ்ட்மினிஸ்டர் சட்டத்திலுள்ள விதிகள அப்படியே அமைக்கப்பட்டிருக்கின்றன. எதிர்காலத்தில் பிரிட்டிஷ் பாராளுமன்றங்களின் சட்டங்கள் இலங்கையைக் கட்டுப்படுத்தாதிருக்கும் பொருட்டும், இப்பொழுது ஒருவரையறைக்குள் கடடுப்பட்டிருக்கும் இலங்கையின் சட்டமியற்றும் அதிகாரத்தை அக்கட்டுப்பாட்டினின்றும் விலக்கும் பொருட்டுமே இவ்விதம் வெஸ்ட்மினிஸ்டர் சட்ட விதிகள் அப்படியே மசோதாவில் சில பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. இலங்கைக்கு அரசியல் சம்பந்தமாகவும் பொருளாதார சம்பந்தமாகவும் கஷ்டங்களிருக்கின்றன. அவைகளை சுலபமாகத் தீர்க்க முடியாது. ஆனால் இலங்கை தன்னம்பிக்கையுடையதாகவும் எதிர்காலத்தில் நம்பிக்கையுடையதாகவுமிருக்கிறது இலங்கைபிரிட்டனுக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கும் விசுவாசமாக இருந்து சுதந்திர நாடுகள் அடைந்துள்ள லட்சியங்களையும் நோக்கங்களையுமடைய அது நிச்சயித்திருக்கிறது. பல்வேறு தொல்லைகளுக்குட்பட்டிருக்கும் இந்த உலகில் இலங்கை ஒரு பெரிய ஜனநாயக நாடு என்பதை அது உலகக்கு நிரூபித்துக் காட்டுமென நான் நம்புகிறேன்.

மசோதாவை எதிர்க்கட்சி சார்பாக ஆசரித்துப் பேசிய கன்ஸாலேவ் அங்கத்தினர் கேப்டன் லியானார்ட் காம்மன்ஸ் பின்வருமாறு தெரிவித்தார்:—பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் பரிணமித்து வளரும் ஓர் முக்கியமான நட்டத்தில் எல்லாக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து இலங்கை சுதந்திர மசோதாவை ஆதரிக்கின்றன இது ஒரு அபூர்வ சந்தர்ப்பமாகும். இனிமேல் இலங்கை விசுவாசத்திலும் அன்பிலும் பிரகாசத்திலும் தன் சொந்த நலத்தை முன்னிட்டுமே பிரிட்டனுக்குக் கட்டுப்பட்டிருக்கும். இலங்கைக்கு அளிக்கப்படும் இந்த சுதந்திரத்தில் பிரிட்டனின் சுத்திரக்சியிறு எதுவுமில்லை.

இலங்கை தனது அரசியல் திட்டத்தை திருத்தியமைத்துக் கொள்ள அதற்கு இனி உரிமையுண்டு. இந்த உரிமை கானடாவுக்குக் கூட கிடையாது. பாதுகாப்பு ஒப்பந்தத்தையும் வெளிநாட்டு விவகார சம்பந்தமான ஒப்பந்தத்தையும் இலங்கை எந்த நிமிஷத்திலும் ரத்து செய்துகொள்ள முடியும். இலங்கைக்கு பூரண சுதந்திரமளிக்கப்பட்டிருக்கிறது. அது தனது விருப்பத்தின்படி சாம்ராஜ்யத்திலிருந்து விலகிக்கொள்ளவும் முடியும்.

சிங்களவருக்கு உபதேசம்

சிறுபான்மையோரான தமிழ் மக்களிடத்து சிங்களவர்கள் நியாயமான முறையில் நடந்து கொள்ள வேண்டும். அதற்கும்மேற்படவே நடந்து கொள்ள வேண்டும் நிர்வாகத்தில் மட்டுமல்ல, அதிகாரத்திலும் பொறுப்பிலும் தமிழர்சமூகத்திற்குப் போதியபங்கு அளிக்கவேண்டும். அவர்கள் நிரந்தரமாகவே அரசியல் சிறுபான்மையோராக இருக்கக்கூடிய நிலைக்கு அவர்களைக்கொண்டு வந்து விடலாகாது தமிழர்களும் நியாயமான உரிமைகளைத் தவிர மிகமிஞ்சிய உரிமைகளைக் கோரலாகாது.

கம்யூனிசம்

இலங்கைக்கு கம்யூனிசத்தால் ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமை இருந்து வருகிறது தமிழர்களோ அல்லது மற்ற சிறுபான்மை வகுப்பினரோ கம்யூனிசத்தை தழுவுவார்களேயாகில் அது சுவர்களை அரித்து விடும். கம்யூனிசம் ஒரு அரசியல் கொள்கையல்லவென்பது ரஷியாவின் அந்நிய நாட்டுக் கொள்கைக்காக உபயோகிக்கப்படும் ஒரு கவி என்றும் நான் கருதுகிறேன்.

கள்ளமாக வெங்காய ஏற்றுமதி

பனங்கட்டியென்று கூறி ரயிலில் அனுப்பினர்

அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்

யாழ்ப்பாணம், நவ 22

யாழ்ப்பாணத்திலிருந்து தென்னிலங்கைக்கு ரயில்களிலும், லொறிகளிலும் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்படுவதை தடைசெய்யப்பட்டுள்ளதாக சர்க்கார் அறிக்கை விடுத்திருந்தது. இப்பொழுது தனிப்பட்டவர்கள் களவாக இடைவெளி கடத்தப்படுவதைத் தடுக்க உணவு இலாகா அதிகாரிகள் இப்பொழுது நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கொழும்புக்கு வந்துகொண்டிருந்த ஒரு ரயிலில் வெங்காயம் அனுப்பப்படுவதாக தகவல் அறிந்த உணவுக் கட்டுப்பாட்டதிகாரி ஒருவர் இன்னொரு பெக்டர்களுடன் கொழும்புத்துக்கு வந்து அங்கு ஸ்டேஷனில் ஒரு பெட்டியில் பனங்கட்டியென்னும் பெயருடன் வெங்காயம் அனுப்பப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்தனர். மொத்தமாக மூன்றரை டன் வெங்காயம் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது இந்த வெங்காயத்தின் விலை சுமார் ரூ 4200 என மதிப்பிடப்படுகிறது அதிகாரிகள் இவ்வெங்காயத்தைப் பறிமுதல் செய்துள்ளனர்.

டாகடர் ஷொக்மன் ராஜினாமா

சென்ட் சபையிலிருந்து விலகினார்

கொழும்பு, நவ 22

தேக அசௌக்யம் காரணமாக டாக்டர் வி ஆர் ஷொக்மன் சென்ட் சபையிலிருந்தும் கல்வி மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி பதவியிலிருந்தும் விலகிவிட்டார் என்று அறியப்படுகிறது.

இரண்டு நாடுகளின் பரஸ்பர சமதிருப்திக்கு வரை பாதுகாப்பு ஒப்பந்தமிருக்கவேண்டுமென்பதற்குப் பதிலாக குறிப்பிட்ட பல வருஷகால அளவிற்கு ஒப்பந்தமிருக்க வேண்டுமென்பதே எனது கருத்து ஏனெனில் இரண்டு நாடுகளில் ஒரு நாட்டில் தீவிர அரசாங்கம் ஏற்படின் ஒப்பந்தத்திற்கு ஆபத்து ஏற்படும் அதனால் சாம்ராஜ்யகட்டிடமே ஒரு நொடியில் தகர்ந்து விடும்.

பாதுகாப்பு ஒப்பந்த சம்பந்தமாக எந்த கேள்விகளுக்கு குடியேற்றநாட்டு உதவி மந்திரி டேவிட் ரீன் வில்லியம்ஸ் பின்வருமாறு பதிலளித்தார்:—

பிரிட்டனும் இலங்கையும் ஒரே சாம்ராஜ்யக் குடும்பத்தைச் சேர்ந்தவைகளாக இருக்கும்போது, பனை ஓற்றுமை தான் அவசியமே யொழிய வேறு வழிகளால் பயனில்லை சாம்ராஜ்யத்தின் நலன்களை பாதுகாக்க பிரிட்டனுக்கு எவ்வளவு அக்கறையுண்டோ அவ்வளவு அக்கறை இலங்கைக்குமுண்டு. **யுத்தம் ஏற்பட்டால், சாம்ராஜ்யத்தைப் பாதுகாக்க வகுக்கும் திட்டத்தில் இலங்கைதான் முதல் ஸ்தானம் வகிக்கும் என்று நான் நிச்சயமாக கருதுகிறேன்**

இரண்டாவது தடவையாக மசோதா வாசிக்கப்பட்டு நிறைவேறியது இனி மசோதா கமிட்டியில் விவாதிக்கப்பட்டு லார்டு சபைக்குச் செல்லும்.

(ராய்ட்டர்)

மலேயாவில் இந்திய சர்க்கார் பிரதிநிதி

திரு திவிக்கு இந்திய வர்த்தக சங்கத்தில் வரவேற்பு

கொழும்பு, நவ 22

மலேயாவிலுள்ள இந்திய சர்க்கார் பிரதிநிதியான திரு ஜே. ஏ. திவிக்கு இந்திய வர்த்தக சங்கத்தார் நேற்று மாலை ஒரு வரவேற்பு உபசாரம் அளித்தனர் சங்கத் தலைவர் திரு எஸ். எச். மூசாஜி தலைமை வகித்தார்.

உபசாரத்திற்குப் பதிலளித்துப் பேசியபோது திரு திவி பின்வருமாறு தெரிவித்தார்:-

பொருள் தாராதிலும், அரசியலிலும், கலாச்சாரத்திலும் இந்தியா ஆசியாவுக்கு தலைமை வகிக்கும். இந்தியாவின் தலைமையில் ஆசியாவில் நிரந்தரமான அமைதி ஏற்படும். இந்தியாவுக்கு வெளியே குடியேறியுள்ள ஒவ்வொரு இந்தியரும் தன்னை இந்தியாவின் தூதராகக் கருதி இந்தியாவின் கௌரவத்தைப் பாதுகாக்கக் கூடிய முறையில் கண்ணியமாக நடந்துகொள்ள வேண்டும் இந்த நாடடில் வாழவசதி கிடைத்துள்ள ஒவ்வொரு இந்தியரும் இந்நாட்டுக்குச் செய்யும் சேவை ஏனையோரும் எதிர்பார்க்கத்தியாரும் பாராட்டக்கூடிய முறையில் செய்யவேண்டும். இந்நாட்டு மக்களுடன் சேர்ந்த மக்களே தாயகமென்று கருதி இந்தியாகளும் இங்கு வாழவேண்டும்.

பாராளுமன்றத்தில் 3 சட்ட மாணவர்

சட்ட மாணவர் சங்கத்தில் வரவேற்பு

கொழும்பு, நவ. 22

சட்ட மாணவர் சங்கத்தின் சார்பில் பாராளுமன்ற அங்கத்தவம் பெற்றுவிட்ட சட்ட மாணவர்களுக்கு ஒரு வரவேற்பு நாளை அளிக்கப்படும். இவ்வங்கத்தினர்கள் ஜாபிதா பின்வருமாறு:- வி நல்லையா, வி குமாரசாமி, எம் டி. பண்டா வரவேற்பிற்கு எம். சிவசிதம்பரம் தலைமை வகிப்பார்

400 தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

நெருக்கடியான நிலை

காலி, நவ 21

காலி டிஸ்டிரிக்ட் உடுகமையிலுள்ள ஹோமதோலா தேட்டத்தில் 400 தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். சென்ற சில தினங்களாக வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது. சமரச முயற்சிகள் தோல்வியுற்றன. ஆயுதந்தாங்கிய போலீசார் தோட்டத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். பலகைது செய்யப்பட்டனர். நிலைமை நெருக்கடியாக இருக்கிறது இத்தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் யூனியனில் அங்கத்தினர்களாதலால் யூனியன் பிரதிநிதிகள் தொழிலாளர் சார்பாக நிலைமையில் கவனம் செலுத்திவருகிறார்கள்.

பர்மா

ஜனுவரி 4-ல் 'யூனியன் ஜாக்' இறங்கும்

சுதந்திரக் கொடி பறக்கும்

பிரிட்டிஷ் கவர்னர் கப்பல் ஏறுவார்

ரங்கூன், நவ 21

ஜனுவரி 4-ம் தேதி பர்மா விடுதலை பெறுவதால் பிரிட்டிஷ் கவர்னர் நடையைக் கட்டுவார் என்று தெரிகிறது அன்று பர்மா-பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு வெளியே பூரண சுதந்திர அந்தஸ்தைப் பெறும். அரசாங்க கட்டிடத்திலிருந்து யூனியன் ஜாக் இறக்கப்பட்டு நட்சத்திர பொறித்த பர்மா மூவர்ணத்தேசீய கொடி பறக்கவிடப்படும்.

இவ்வைபவம் முடிந்ததுமே பர்மா கவர்னர் கப்பலேறிவிடுவார்.

ஆங்ஸான் கொலைவழக்கு

இவ்வழக்கு விசாரணை செவ்வாய்க்கிழமை மீண்டும் ஆரம்பிக்கும்.

சட்ட விரோதமாக ஆயுதங்கள் வைத்திருப்பதற்கு மரணதண்டனை விதிக்க பர்மிய அதிகாரிகள் தீர்மானித்து கொலைதண்டனையை நிறைவேற்றி வைக்க ஒரு கோஷ்டியும் நியமிக்கப்பட்டுவிட்டது (ராய்ட்டர்)

பொது மக்களுக்கு எட்டாது கொடியைக் கட்டுங்கள்

பொதுக் கட்டிடங்களுக்கு சிங்கக் கொடி

யாழ்ப்பாணம், நவ 22

வீடமாகாணஏஜண்ட் யாழ்ப்பாண ஜில்லா அரசாங்க காரியாலயங்களுக்கு விடுத்துள்ள சுற்றறிக்கையில் கூறியுள்ளதாவது:-

"பாராளுமன்ற திறப்புவிழா தினத்தில் பொதுக் கட்டிடங்களை அலங்காப்பதற்கு ஸ்டோர் சூபரின்டெண்டிடமிருந்து துலங்கை சிங்கக் கொடிகளும், மற்றும் கொடிகளும வந்துள்ளன. அவை என்னுடைய பாதுகாப்பில் இருக்கின்றன இவற்றை யாழ்ப்பாணத்துள்ள எல்லா பொதுக் கட்டிடங்களிலும் அலங்கரிக்க வேண்டும். எல்லா கொடிகளும 27-ம்தேதிக்குமுன் திரும்ப நல்லூரிலே எனனிடம் ஒப்படைக்க வேண்டும். அக்கொடிகள் ஸ்டோர் சூபரின்டெண்டுக்கு அனுப்பப்பட வேண்டியவைகளாகும்.

உங்களுடைய காரியாலயத்தில் பொறுப்புள்ள ஒரு அதிகாரியை 21-ம்தேதிக்கச் சேரிக்கு அனுப்பி உங்கள் இலாகாவுக்கு தேவையான கொடிகளைப்பெற்றுக் கொள்ளவும்."

இத்தடன் டைப் அடிக்கப்பட்டதும் கைச்சாத்திடப்படாததுமான ஒரு துண்டு சேர்க்கப்பட்டிருந்தது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:-

கட்டிடங்களிலும், தடிகளிலும் கட்டப்படும் கொடிகள் பொது மக்களுக்கு எட்டாத உயரத்தில் கட்டப்பட வேண்டுமென்பது சர்க்காரின் அறிவுறுத்தல். இக்கொடிகளைப் பாதுகாக்கவும் அவைகள் தேவையில்லையென்றுகண்டதும் அவற்றை திரும்ப ஒப்படைக்கவும் அதிகாரிகளை ஆங்காங்குநிறுத்தவைக்க வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

இலங்கை இந்தியர் பிரச்னைபற்றி சமரசப் பேச்சு

இந்தியா பாராளுமன்றத்தில் பண்டித நேரு அறிக்கை

இலங்கை-பிரிட்டன் ஒப்பந்தம் பற்றி 'ஹிந்துஸ்தான் ஸ்டாண்டர்டு' கருத்து

புதுடில்லி, நவ 21

இந்திய பாராளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது இந்தியா பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு பின்வருமாறு தெரிவித்தார்:-

இலங்கையில் வாழும் இந்தியர்களின் அந்தஸ்தைக் குறித்து கூடிய சீக்கிரம் இலங்கை சர்க்காருக்கும் இந்திய சர்க்காருக்குமிடையே சமரசப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும்.

இலங்கை-பிரிட்டன் ஒப்பந்தம்

கலகத்தா, நவ 20

இலங்கை-பிரிட்டன் ஒப்பந்தத்தைக் குறித்து இங்கு வெளியாகும் பிரபல தினசரிப் பத்திரிகையான "ஹிந்துஸ்தான் ஸ்டாண்டர்டு" பின்வருமாறு எழுதுகிறது:-

இலங்கை-பிரிட்டன் ஒப்பந்ததைக் கவனிக்குமிடத்து இலங்கையின் பாதுகாப்பும் வெளிநாட்டு விவகாரங்களிலும் மற்றும் சில விஷயங்களிலும் பிரிட்டன் தனக்குள்ள ஆதிக்கத்தில் பெரும் பகுதியை தனனிடமே வைத்துக்கொண்டிருக்குமென்று தெரிகிறது

இந்துமகா சமுத்திரத்தில் பிரிட்டன் ஆதிக்கம் செலுத்துவதற்காக இலங்கை சம்பந்தமாக பிரிட்டன் செய்துள்ள இந்த ஏற்பாடு இந்தியாவை எவ்வளவுதூரம் பாதிக்கும் என்பது இந்தியா, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சேர்ந்திருப்பதா அல்லது விலகிக்கொள்வதா என்பதைக் குறித்து இந்தியா தீர்மானம் செய்வதைப் பொறுத்திருக்கிறது.

ஆனால் இலங்கை தனது ஒப்பந்ததின் மூலம் சில முக்கியமான விஷயங்களில் பிரிட்டிஷ் தேர்க்காவில் கட்டப்பட்டிருப்பதால், இலங்கையின் புதிய அந்தஸ்தானது எதிர்கால இந்தியா-இலங்கை உறவு அதிக சுமுகமாக இருக்குமென்று சொல்லமுடியாது

ஆகவால் இந்தியா செய்ய வேண்டுவதென்னவெனில் அது இலங்கையைக் தனது இளைய சகோதரியாகப் பாவித்து அரசியல் உறவில் இந்தியா இலங்கையைப் பிணைத்துக்கொள்ள வேண்டும். அதன் பிறகு இந்தியா அகில ஆசிய ஐக்கியத்திற்குப் பங்கம் ஏற்படாத முறையில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் போக்கைக் கவனித்து அதற்கு தக்கபடி இலங்கையுடன் உறவு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இளங்குற்றவாளிக்கு பிரம்படி

மட்டக்களப்பு, நவ. 22

நாவற்காடடைச் சேர்ந்த கணபதிப் பிள்ளை நடராஜா என்பவர் (வயது 12) வாடகைக்கு எடுத்த சைக்கிளை திரும்பக் கொடுக்கத் தவறியதாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் எதிரிக்கு நீதிபதி 6 பிரம்படி கொடுக்கும்படி தீர்ப்பளித்தார்.

பிரதமர் கட்சிக் காரியாலயத்தில் வெடி

இத்தாலியில் நடைபெற்ற சம்பவம்

ரோம், நவ 21

கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி, பொதுஜனங்கள் கட்சி ஆகியவற்றின் காரியாலயத்தில் இன்று வெடி குண்டுகள் வெடித்தன.

கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சித் தலைவரில் ஒருவரான கன் பேரிய இடபோது இத்தாலிய பிரதமராக உள்ளார்

(ராய்ட்டர்)

கர்ப்ப ஸ்திரீ கட்டுக் கொலை

எதிரிக்கு மரண தண்டனை

கொழும்பு, நவ. 22

கர்பஹா பகுதியில் பி. சுவாரிஸ் தோமஸ் என்பவர் தனது வைப்பாட்டியான லீலாவதி கோனடா என்னும் 27 வயது ஸ்திரீயை கடந்த ஏப்ரல் மாதம் 3-ம் தேதி நில வெளிச்சத்தில் தனியையான ஒரு இடகத்துக்கு காரில் அழைத்துப் போய் அங்கே அவளை நான்கு முறை சுழல் துப்பாக்கியால் சுடடுக் கொலை செய்து விட்டு திரும்பியது சம்புந்தமான ஒரு வழக்கு கொழும்பு அசைஸ கோர்ட்டில் நீதிபதி திரு. டயஸ முன் விசாரணை செய் யப்பட்டது.

விசாரணையின்போது, எதிரி ஒரு நாள் பராளதாப லீலாவதி என்ற பெண்ணை அப்பெண்ணின் சகோதரியின் வீட்டில் இருந்து அழைத்துச் சென்றதாகவும் இப்பெண் எதிரியின் ஒன்றுவிட்ட சகோதரியென்றும் அன்று முதல் எதிரி இப்பெண்ணை தனது வைப்பாட்டியாக வைத்திருந்ததாகவும் இக்கொலை சம்பவம் நடந்ததற்கு முன் அப்பெண்ணை எதிரி போய் அழைத்து வந்ததாகவும் பெண் கர்ப்பமாக இருந்ததாகவும் பெண்ணை அழைத்துச் சென்று தனியிடத்தில் சுட்டுக் கொன்றதாகவும் கூறப்பட்டது.

ஜூரர்கள் எதிரி குற்றவாளியென விசாரணை முடிவில் தெரிவித்ததனால் நீதிபதி எதிரிக்கு மரண தண்டனை விதித்தார்.

ஆயுர்வேத வைத்திய சாலை திறப்புவிழா

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ்ப்பாணத்தில் சிவானந்த சித்தர் வைத்தியசாலையை ஸ்ரீமதி ஆயிஷாலுப் திறந்து வைத்துப் பேசுகையில் ஆயுர்வேத வைத்தியத்தின் சிறப்பைப்பற்றி பேசினார்.

மட்டக்களப்பு, நவ. 22

மட்டக்களப்பு சர்க்கார் ஏஜண்டாக இருந்த திரு. ஆர். எச். டி மான்டெர்ஸ் அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்டதால் கீழ்மாகாணப் பகுதிக்கு திரு டி. ஸி. பி குணவர்தனா சர்க்கார் ஏஜண்டாக நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN."
194 ச, நட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3611
சர்வதிந்து ஞ கார்த்திகை மீ 8உ
ஞாயிற்றுக்கிழமை

பதிலளிக்க வேண்டும்?

மற்ற மனிதருக்குக் கெடுதல் செய்யாமல் எந்தக் காரியத்தையும் நடத்தும் அதிகாரமே சுதந்திரம் என்பதன் உண்மை. உதாரணமாக நாம் ஒரு ரோட்டை எடுத்துக் கொள்ளலாம் அதில் மனிதரும் நடக்க உரிமையுண்டு மோட்டார் வண்டிகளும் போக உரிமையுண்டு அந்த உரிமையை ஒவ்வொருவரும் சுயேச்சையாக அனுபவிக்கலாம். ஆனால் பாதையில் போகும் மனிதரை கொல்ல, மோட்டார் வண்டிகளுக்கு உரிமை கிடையாது. அல்லது மோட்டார் போவதை தடுக்க மனிதனுக்கு உரிமை உண்டாகாது. இவ்வாறு சுதந்திரத்திற்கு வியாக்யானம் செய்வதால் அதற்கு ஓர் எல்லையும் நிர்ணயமும் ஏற்பட்டாலும் கூட அதுவே முற்றிலும் பொருத்தமானதாகும். ஒவ்வொருவருக்கும் பூரணமான சுதந்திரம் உண்டு. ஆனால் அது மற்றவர்களுடைய சுதந்திரத்திற்கு எதிரானதாகக் கூடாது. இதைத்தான் நியாய சித்தாந்தம் என்று ஆங்கில அரசியல் ஞானியாகிய ஹெர்பர்ட் ஸ்பென்சர் சொல்லியுள்ளார்.

இலங்கை அரசியலில் தமிழர் இந்த நியாய சித்தாந்தத்திற்கு விலக்காகவே நடத்தப்படுகின்றனர். சென்ற பொதுத் தேர்தலில் யூ. என். பி. கட்சி தமிழ் அபேட்சகர்கள் யாவருக்கு தமிழ் மக்களால் தெரிவு செய்யப்படவில்லை. வெளையறிக்கைக்குச் சாதகமாக வாக்களித்த தமிழ் பிரதிநிதிகளில் ஒருவரைத் தவிர்த்து மற்றும் யாரேனும் அரசியல் வாழ்வினின்றும் தமிழரால் அகற்றப்பட்டு விட்டனர் தமிழ் மக்கள் யூ. என். பி. அரசாங்கத்தை வெறுக்கின்றனர். இந்த நிலையில் திரு. சேனநாயக்கா இரண்டு முண்டாசுகாரிகளின் உதவியைக் கொண்டு தமிழரைத் தமக்கு நிரந்தர அடிமைகளாக்கப் பார்க்கிறார். பிரயத்தனங்கள் செய்து வருகிறார்.

தமிழன் சுதந்திர வேட்கை உடையவன் இதற்கு விமோசனம் இல்லையா என்று ஏங்குகிறான் "ஆம்! விமோசனம் உண்டு" என்று நேற்று முன்தினம் அகிலஇலங்கைத் தமிழ் காங்கிரஸ் பத்திரிகை அறிக்கைகள் "இலங்கையிலுள்ள சகல வகுப்புகளுக்கும் சுதந்தரத்தை அளிக்கக்கூடிய பரிபூரண சுதந்திர அரசியலே இலங்கைக்கு வேண்டும். எல்லா வகுப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு அரசியல் திட்டத்தை தயாரிப்பதற்கு ஒரு அரசியல நிர்ணய சபை கூட்டப்பட வேண்டும்;" என்று தமிழ்க் காங்கிரஸ் குடியேற்றநாட்டு மந்திரியையும் இலங்கைப் பிரதமரையும் கேட்டிருக்கிறது. தன்னைப் போல பிறரை நேசிக்கும் எண்ணம் இருக்கும்எவனும் இதைமறுக்க முடியாது. இதை திரு. சேனநாயக்கா மறுத்தால் "தமிழருக்குச் சுயநிர்ணய உரிமை வேண்டும்" என்றும் தமிழ்க் காங்கிரஸ் கோரியுள்ளது. நாட்டை விட்டு அகலும் நேரத்தில் பிரிட்டிஷார், தமிழ் மக்களை திரு. சேனநாயக்கா வசம் ஒப்படைத்தல் தகாது. தமிழ் மக்கள அதற்குச் சம்மதிக்கவும் மாட்டார்கள். தமிழ் மக்களின் கோரிக்கைக்கு திரு. டி.ச் ஜோஸ்லை உடனே பதிலளிக்க வேண்டும்

எல்லையில் அடக்குமுறை

குதாய் கித்மத்கார்தலைவரை கைது செய்தனர்

பெஷாவர், நவ 18

பெஷாவர் கன்டோன்மெண்ட், குதாய்கித்மத்கார் ஜிர்காவின் தலைவர் கான் முகம்மது அய்யூப் கான், நேற்று போலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பொது சர்க்கார் குமாஸ்தாக்கள் சங்க கூட்டம்

நகர மண்டபத்தில் நடைபெறும்

கொழும்பு, நவ. 22

கொழும்பு நகர மண்டபத்தில் இன்று பிற்பகல 2 15 மணிக்கு பொது சர்க்கார் குமாஸ்தாக்கள் சங்கத்தின் விசேட கூட்டமொன்று நடைபெறும். இக் கூட்டத்தில் பிரதம மந்திரியின் அறிக்கையிற்றியும், இச் சங்கத்தின் நகல் சட்டங்களபற்றியும் ஆலோசனை நடத்தப்படுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

நீர்கொழும்பில் பொதுக் கூட்டம்

கொழும்பு, நவ. 22

நீர்கொழும்பு முத்தவெளியில் இன்று மாலை 4 மணிக்கு இலங்கை பாஸிஸ எதிர்ப்புக் கூட்டணியின் ஆதரவில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறுமென்று அறிவிக்கப்படுகிறது. இக்கூட்டத்தில் ஸ்ரீமதி ஆயிஷா ராஜூ டாக்டர் கொலவின் ஆ டி சில்வா, திரு. ஜீ ஜீ. பொன்னம்பலம், திரு. பீட்டர் கெனமன், திரு. பிலிப் குணவர்தன, திரு. ஜி. ஆர். மோதரா ஆகியோர் பேசுவார்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது.

புதிய அமெரிக்க ராணுவத் தலைவர்

வாஷிங்டன், நவ. 2

அமெரிக்க ராணுவ பிரதிநிதிகளுக்கத்தர் ஐஸன்ஹோவருக்கு ஜனாதிபதி டிரூமன், ஓமார் பிராட்லி என்பவரை நியமனம் செய்திருக்கிறார். (ராய்டர்)

கொழும்பில் திரு. பீட்டர் கெனமனுக்கு வரவேற்பு

கொழும்பு, நவ 22

கொழும்பு மத்திய தொகுதி பாராளுமன்ற அங்கத்தினர் திரு. பீட்டர் கெனமனுக்கு இன்று காலை 9-30 மணிக்கு மருதானை சர்க்கார் மத்திய பாடசாலையில் ஒரு பொது வரவேற்பளிக்கப்படும் இவ்வரவேற்புக் கூட்டத்தில் டாக்டர் மாரன் ரத்தினம், திரு. டி. ஜே. என் பி ஜாபா, ஸ்ரீமதி ஆயிஷா ராஜூ, திரு. எச் ஜி. டி. சுகதாஸ முதலியோர் பேசுவார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

விமான போக்குவரத்து ஆரம்பம்

'ஏர் இண்டியா' அறிவிப்பு

சென்னை-பெங்களூர், கோயமுத்தூர்-கொச்சி-திருவனந்தபுரம் விமான போக்குவரத்தை 21-ம் தேதி வெள்ளிக்கிழமையிலிருந்தும் நிற்காமல் செல்லும் சென்னை-டப்பாய்-சென்னை சர்வீஸ நவ 23-ம் தேதியிலிருந்தும் பழைய கால அட்டவணை பிரகாரம் ஆரம்பமாகும் என்று ஏர் இண்டியா அறிவிக்கிறது.

கிருஷிக இலகா காரியாலயத்தில் திருட முயற்சி

கண்டி, நவ 22

கண்டி மலபார் வீதியிலுள்ள கிருஷிக இலாகா காரியாலயத்தில் புதன்கிழமை இரவு சுமார் 9-30 மணிக்கு ஒரு திருடன் புகுந்து திருட முயற்சிக்கையில் அந்த காரியாலய எடோர் அதிகாரி எதிரியைக் கண்டுபிடித்து அவரைப் போலிஸாரிடம் ஒப்படைத்தார். களவெடுக்கமுயற்சித்தவர் போலிஸ பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

ரயிலில் டிக்கட்டின்றி பிரயாணம்

எதிரிகளுக்கு அபராதம்

சாவகச்சேரி. நவ 22

புகையிரததில் பிரயாணச் சீட்டின்றி பிரயாணஞ் செய்ததாக பொன்னுத்தமப், செல்வரத்தினம், அந்தோனிப்பிள்ளை ஆகியவர்கள்மீது குற்றஞ்சாட்டித தொடரப்பட்ட வழக்கில் சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் எதிரிகளுக்கு தலா ரூ. 25 அபராதம் விதித்தார்.

ஒருசிறு குழாத்திடம் சிக்கியுள்ள இலங்கை அரசியல்

உற்றார் உறவினர் சுற்றத்தாருக்கு பதவிகள் பங்கீடு

யூ. என். பி. யை சர்வாதிகார பீடத்திலமர்த்தும் "இலங்கை சுதந்திர மசோதா"

சிறுபான்மையோருக்கு பாதுகாப்பு மறுக்கப்படும் அக்கிரமம்

தனிநாடுகளுள்ள கூட்டரசாங்கமே சாலச் சிறந்தது

(டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன்)

சோல்பரி அரசியல் திட்டம் இலங்கை மக்களுக்கு ஏற்றதல்ல அதிலும் முக்கியமாக இதிலுள்ள சிறுபான்மையினருக்கு இதிட்டம் உதவாது ஆனால் இந்தேசத்திலே தற்செயலாக சிறிய ஒரு கோஷ்டியிடம் அரசியல் அதிகாரம் உள்ளடங்கியிருப்பதால் அகக்கோஷ்டியினருக்கும் அவர்களின் நண்பர்கள், ஆதரவாளர்கள், உற்றார் உறவினருக்கும் புதிய அரசியல் திட்டம் அதிக சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கிறது. நண்பர்கள், ஆதரவாளர்கள் முதலியோருக்கு இலங்கையில் பதவிகள் இல்லாதுபோய்விட்டாலும் இந்தியா, பாகிஸ்தான், பிரிட்டன் முதலிய இடங்களிலாகுதல் உத்தியோகம் கிடைக்கக்கூடியதாக சந்தர்ப்பத்தை இதிட்டத்தின்படி அக்கோஷ்டி ஏற்படுத்திக் கொள்ள வசதி கிடைத்துள்ளது. இலங்கையிலுள்ள மக்கள் இன்னும் அரசியல் விஷயங்களில் ஒன்றும் தெரியாதவர்களாகவே இருக்கிறார்கள். இதனால் இங்கு அரசியலதிக்கத்தைக் கைக்குள் வைத்திருக்கும் இக்கோஷ்டியினர் தங்கள் பிரசாரப் பத்திரிகைகளின் உதவியினால் பொது மக்களை எமாற்றி ஒன்றுமில்லாததைப் பெரிய சுதந்தரமென்று ஏய்ப்பதாகக் காட்டி மக்களை நம்பச் செய்து வருகின்றனர். ஆனால் எந்த நேரமும் எல்லாரையும் ஏமாற்ற முடியாது. இப்பொழுது பொது மக்கள் உண்மை நிலையைப் படிப்படியாக அறிந்து வருகிறார்கள் போலிருக்கிறது. மினியன அந்தஸ்தை உண்மையானதெனக் கூறி மக்களை இங்குள்ள அரசியல வாதிகள் நம்பச்செய்ய கையாண்ட தந்திரவிதைகளை மக்கள் உணர ஆரம்பித்துவிட்டார்கள்.

இலங்கையின் சோல்பரி அரசியல திட்டம் அடுத்த வருடமுதற்பகுதியில் ரத்துச் செய்யப்பட்டு அதன்பின் 'டொமினியன் அந்தஸ்து" என்று அழைக்கப்படும் நிலைமைக்கு இலங்கை வருமென்று கூறப்படுகிறது. இது உண்மையில் நடைபெறக்கூடியதல்ல. சோல்பரி அரசியல திட்டம் ஒரு நல்ல திருத்தங்களுடன் தொடர்ந்திருக்கும். இந்தத் திருத்தங்கள் இலங்கைத் தேசத்தின் அரசியல், சமூக, பொருளாதார வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தானும் மாற்றத்தைக் கொண்டுவர மாட்டாது சால்பரி அரசியல திட்டத்தில் ஒதுக்கி வைக்கப்பட்ட விஷயங்களில் ஏற்றமதி, இறக்குமதி, நாணய செலாவணி பாதுகாப்பு, இராணுவங்கள், வெளிநாட்டுத் தொடர்பு முதலிய முக்கிய விஷயங்கள் இலங்கை அரசாங்கத்திற்கு அப்பாற்பட்டவைகளாகவே இருக்கின்றன. டொமினியன் அந்தஸ்து என அழைக்கப்படும் அந்த நேரத்திலும் இதே விஷயங்கள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும். இலங்கையின் யூ. என். பி. அரசாங்கம் இவற்றை உடன்படிக்கைகள் என்று கட்டுப்படுத்தி சாத்திட்டுக் கொடுக்கும் இந்த அந்தஸ்தை வாங்கியுள்ளது.

முக்கியமான ஒப்பந்தங்களின் விஷயத்தில் புதிய பாராளுமன்றத்தின் முடிவான தீர்மானங்களைப் பொறுத்து நடந்து கொண்டது இந்தேச மக்களுக்குக் கிடைப்பதாக விளம்பரம் செய்யப்பட்ட சுதந்திரத்திற்கு முற்றிலும் விரோதமானதும் கேவலமானதுமான நடத்தையாகும். கட்டிய கைகளுடன பாராளுமன்ற அங்கத்தினரை இருக்கவிட்டுதேசத்தின்முக்கிய விஷயங்களுக்கான விஷயங்களில் இரகசியமாகப் பேச்சுவார்த்தை நடத்தி குறிப்பிட்ட சில பிரதிநிதிகளிலை நடத்தப்பட்ட சதிச் செயல் ஜனநாயக பாராளுமன்றத்தின் செயல்களுக்கு முற்றிலும் விரோதமான செயலாகும்.

இச்சுதந்திர மசோதாவின் மாண்பு எத்தகையதாக இருப்பினும் இதனைப் பெறுவதற்கு அவர்கள் நடந்து கொண்ட முறை, மக்களை விழிபடையச் செய்து அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள அரசியல் திட்டத்தைப்பற்றி உணரச்செய்ய வேண்டும்.

நாங்கள் சிறு குழந்தைகளைப் போல இங்கும பிரிட்டிஷ்பாராளுமன்றத்தைப் போன்று நடவடிக்கைகளைக் கையாளலாமென்று இருக்க முன்னரே தெரியப்படாத ஒரு சிலராலாங்கிய கோஷ்டியினர் பிரிட்டிஷ் ஏகாதிபதியகதும் தந்திரிகளுடனும் சதிசெய்து முழு அரசியல் ஆதிக்கத்தையும் பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றனர்.

புதிய அரசியல் திட்டத்தின்படி முழு ஆதிக்கமும் மந்திரி சபையிடமே இருக்கும். பிரிட்டனில கூட மந்திரி சபையிடமே ஆதிக்கம் இருக்கிறது. அரசியல் சட்டதிட்டங்கள் நன்கறிந்தவர்கள் பிரிட்டிஷ் மந்திரி சபை பாராளுமன்றத்தை ஆட்சிசெய்கின்றதென்பதையும் பாராளுமன்றத்தைவழிநடத்துவதுடன பாராளுமன்றத்தைக் கலைத்து விடுவதாகப் பயமுறுத்தி அதனை அடிணியவும் செய்ய மந்திரி சபையினால முடியும் என்பதையும் ஒரு விதக் ஆட்சேபனையுமின்றி ஒப்புக் கொள்ளுகின்றனர். பிரதம மந்திரி தமக்கு தேவையான மந்திரி சபையினரை தெரிந்தெடுக்கவோ, விலத்தவோ முடியும். பிரிட்டிஷ் பாராளுமன்ற முறைப்படி அவர் முழுச் சர்வாதிகாரத்தையும காட்டமுடியும.

இங்கிலாந்திலே அரசியல் ஆதிக்கம மந்திரி சபையிடமும் அதன் தலைவரிடமும (பிரதமர்) இருந்த போதிலும ஜனநாயக உரிமையுள்ள சுதந்தரத்தை இங்கிலாந்தின் மக்கள் அனுபவிப்பதை அவர்கள் தடை செய்யவும் இல்லை. கட்டுப்படுத்தப்படாத ஆதிக்கத்தை யுடையோரது ஆட்சியில் காணப்படும் ஒடுங்கீனங்கள் அங்கு நடைபெறவும் இல்லை. பாராளுமன்றத்துக்கு அங்கு அதிகாரம் இல்லையென்றாலும் பொது மக்களின் அபிமானத்தைப் பெறறுக்கொள்வதற்காக மந்திரி சபையின் பாராளுமன்றக் கட்சி அதனைக்கட்டுப்படுத்தும். இலங்கையிலநிலைமைமுற்றிலும் மாறுபடாதாகும். இலங்கையிலுள்ள சாதாரண மனிதனை பழைய வழக்கமபோன்று அதிகாரத்துக்கு அடிபணிந்து விடுகின்றான. எத்தகைய ஆட்சியாக இருந்தாலும அவனை கவனிப்பதில்லை. இன்றைய சரித்திரத்தில் பொது மக்கள் உரிமைக்காக போராடும் ஒரு சாதாரண கிராம வாசியை நாம் காண முடியாது பிரிட்டிஷ் மந்திரி சபை முறை ஆட்சியை இங்கு கொண்டுவந்து சுமத்துவது தனி மனித சுதந்தரத்துக்கு பாதகமானதாகும். அதோடு தனி மனிதனை பழைய அதிகாரவர்க்க ஆட்சிக்குட்படுத்துவதாகவும் இருக்கும். மேலும் பிரிட்டிஷ் மந்திரி சபையின் ஆட்சி முறை தனிப்பட்ட பிரிட்டிஷ் பிரஜைகளுக்கு எல்லா வகையிலும் ஆதிக்கம் செலுத்தவும முடியாது பிரிட்டிஷ் பிரஜைகள் ஸதல ஸ்தாபனங்களிலும சங்கங்களிலும நேரடியாக தொடர்புடையவர்களாக இருக்கின்றனர். சராசரி பிரிட்டிஷ் பிரஜைக்கு சுய ஆட்சி அகு உணமையானதாக இருக்கிறது. பிரிட்டனின் மக்கள்சர்வாதிகாரத்துக்குள் உட்படவும் இல்லை. மந்திபசர்க்காரால் ஆளப்படவுமில்லை. அவர்கள் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்கின்றனர் பல ஆயிரக்கணக்கான சுயாட்சி ஸதாபனங்களை ஒன்றுகூட்டி நடத்தவும் வெளி நாட்டு விவகாரங்களைக் கவனிக்கவும்தான் மந்திரி சபை அவசியமாகிறது உள் நாட்டு விவகாரங்களை விட வெளி நாட்டு பிரிட்டிஷ் சாம்ராஜ்ப பலத்தை பாதுகாக்கவும உலகில் தனது நிலைமையை ஸதிரப்படுத்திக் கொள்ளவும்தான் மந்திரி சபை இருக்கிறது.

இலங்கையில் அரசாட்சி எப்பொழுதும தனி ஆதிக்கப் பகுதியிலேயே இருக்கிறது. தனி ஆதிக்கப் பகுதியில் இருந்து மக்கள் ஆளப்பட்டு வருகின்றனர் பழைய காலத்தில இருந்த முறையை இப்பொழுதும பின்பற்றுகின்றனர். இந்த நிலையில பிரிட்டிஷ மந்திரி சபையின் முறையை பின்பற்றினால் அது சர்வாதிகார ஆட்சிக்கு அடிகோலுவதாக இருக்கும். அதனால் தனி மனிதனின் சுதந்திரம் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படமாட்டா. இப்பொழுது யூ. என். பி. கட்சி மந்திரிமார் எங்கள் ஸதலஸ்தாபனங்களை அடக்கி ஒடுக்கப் பார்க்கும் முறைகள் எங்கள் கூட்டுறவு இயக்கம நடத்தப்படும் முறைகள்-எல்லாம மதிய சர்க்காரிலிருந்து நடத்தப்படுவது ஜனநாயகமற்ற முறையையே காட்டுகிறது.

ஜனங்கள் ஐந்து வருடத்துக்கொருமுறை வாக்களித்து பாராளுமன்றத்துக்குப் பிரதிநிதிகளை தெரிய முடியுமானாலும் அந்த ஆட்சி மக்களுக்காக நடத்தப்படுவதாக இருக்கமாட்டாது. மக்களின் உரிமைகள் யாவும் இப்பொழுதுள்ள புதிய அரசியல் திட்டத்தின்கீழ்மக்கிபஆட்சிகளுள் ஒடுக்கப்படுவிட்டன

ஆதிக்கத்தை நாட்ட வழி

சோலபரி அரசியல் திட்டம் இங்கு முதலில் பிரஸதாபிக்கப்பட்டபோதுநாம் "அதுமோசத்தனமானது. ஏகாதிபத்தியத்தின கையாட்களுக்கு சூழ்ச்சி முறையால் திடமான அரசாங்கத்தை அமைக்கும் வசதியை அது கொடுக்கிறது" என்று கூறினோம். ஆனால் நாம் சம்பவம நடக்குமுன ஞானம் பேசுபவர்களாக கருதப்பட்டோம். அப்போது நாம் நம்பப்படவில்லை. ஆனால் இன்று அதிகரிக்கப்பட்ட 28 மந்திரி பதவிகளாலும, சபாநாயகர், உபசபாநாயகர், உபசபைகளின் தலைவர், பிரதமரின் வேண்டுகோளின் பிரகாரம் தெரியப்பட்ட ஆறு நியமன அங்கத்தினர் முதலிய பதவிகளாலும், ஒரு திடமான அரசாங்கத்தைச் செயற்கை முறையால் வெறும் பண சம்பந்தமான உபாயங்கள் மூலம நிறுவ முடியும் என்பதை எல்லோரும் அறிகிறார்கள். இதுதுடன் மேல்சபையில் பிரதமர் தமது நண்பர்களையும், ஆதரவாளரையும் நியமிக்க வகை இருக்கின்றது. அதுமட்டுமா? அயல்நாடுகளில் பெருவாரியான சம்பளத்துடன் கூடிய உத்தியோகங்கள் வேறு இருக்கின்றன. எஜமானர் பாசுகள

இவை யெல்லாவற்றையும் கவனிக்கும்போது இவ்வரசியல் திட்டத்தின் மோசத்தனமும், ஏகாதிபத்தியம் நம்மீது பிரயோகித்திருக்கும் ஏமாற்று வித்தையும் தெட்டத்தெளிவாகத் தெரிகிறது. இந்தப் பித்தலாட்டத்துக்கு ஒத்தாசை புரியும்படி மக்களுக்கு எஜமானர்கள் நிச்சயம் பதிலுபகாரம் செய்யமுன்வருவார்கள். அப்பதிலுபகாரம் என்ன? சொந்த அதிகாரம், இந்நாட்டை விரும்பியகாலம்வரை ஆட்சி செய்ய ஏகாதிபத்திய உதவி என்பவையே அவ்வுபகாரங்களாகும். ஆனால் நாம் மீண்டும் கேட்கிறோம்: இதுவா பொது மக்களுக்குத் தேவையான சுதந்திரமும சுயாட்சியும?

பாரபட்சம்!

பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் சம்பந்தப்பட்டமட்டில் சேனநாயக்கா மூளையில் தோன்றிய இவ்வரசியல் திட்டம் சிறுபான்மையரான முஸ்லிம்கள், தமிழர்கள் சம்பந்தமாக மிகுந்த பாரபட்சமாக இருக்கிறது. ஜனத்தொகையில் நாலில் ஒரு பங்கான தமிழர் பாராளுமன்றத்தில் ஐந்திலொரு எண்ணிக்கை ஸ்தானத்துக்கு அதிகமாக ஒருபோதும் பெற முடியாது.

அதேபோல் ஜனத்தொகையில் 7 வீதமான முஸ்லிம்கள் 4 ஆசனங்களுக்கு அதிகமாகப் பெற முடியாது. ஆயின் கடந்த தேர்தலில் தப்பித்தவறி ஆறு ஆசனங்களை அவர்கள் பெற்று விட்டனர் சுருக்கமாய்ச் சொல்லப்போனால் நாட்டின் 33 வீதமான தமிழ் பேசும் மக்கள் 24, 25 வீத ஆசனங்களுக்கு அதிகமாகப் பெற முடியாது. நாகரீகமடைந்த எல்லா நாடுகளிலும் முக்கிய சிறுபான்மைச் சமூகத்தினருக்கு நியாயமான விசேஷ பாதுகாப்புத் தரப்படுகிறது. இதன்படி தமிழ் மக்களுக்கு குறைந்த பட்சம் 40 ஆசனங்களாவது கிடைக்க வேண்டும். ஆனால் மிகவும் குரூரமான முறையில் 24, 25 ஆசனங்களே அவர்களுக்குத் தரப்படுகிறது.

ஆனால் பெரும்பான்மைச் சமூகத்துக்கு அதிக ஸ்தானங்கள் மூலம் விசேஷ பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதிலும் முக்கிய நகரப் பகுதிகளிலும் பார்க்க குறைந்த ஜனத்தொகையுள்ள சேனநாயகக்காவின் கையாட்களின் ஆட்சிப் பிரதேசங்கள் விசேஷ சலுகைகளைப் பெறுகிறது. இவ்விடங்களில் அவரது நீர்ப்பாசன, விவசாய, குடியேற்ற இலாகாக்கள் சர்வ சக்தியுடன் விளங்குகின்றன. இப் பிரதேசங்களில் அதிக தொகுதிகள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் ஆட்சி புரியும் விவசாய மந்திரியின் இஷ்டப்படி ஆடக்கூடிய தொகுதிகள் ஆகின்றன. ஆகவே அவரே மிகுந்த அரசியல் சக்தி வாய்ந்த மந்திரி ஆகிறார். எனவே அவரே பிரதமர் பதவியின் வாரிசாகிறார். இதுவே இலங்கையின் உள்நாட்டு விவகாரநிலை - இலங்கையின் அரசியல் திட்டம் எமது அயல்நாட்டு விவகாரச் சித்திரத்தை நாம் இங்கு வரையமுடியாது. ஏனெனில் வர்த்தகம் பணம் சம்பந்தமாக சமீபத்தில் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் இன்னும் வெளியாக வில்லை.

ஏகாதிபத்தியச் சதி!

தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த தேர்தலமுறை அநியாய நடவடிக்கையின் பினனே பல ஏகாதிபதிய சூழ்ச்சிகள் உள்ளன. தென்னாசியாவுக்கு எதிராக பிரிட்டன் இலங்கையை ஓர் ராணுவ தளமாக உபயோகக்க விரும்புகிறது. எனவே ஆசியாவுக்குச் சாதகமான சக்திகளை ஒடுக்கி ஆசிய விரோத ஏகாதிபத்திய தாசர்களுக்கு அரசியல் ஆதிக்கம் பெறறுத்தர உதவி செய்கிறது.

இலங்கையை நிரந்தர கடல், தரை, ஆகாயப் படை

(3-ம் பக்கம் பார்க்க)

வெலன்டோவையே அருந்துங்கள்!

இலங்கையில் சிறந்த முதற்தரமான பழரச பானங்கள்!
போலி பானங்களில் ஏமாறுதீர்:
வெலன்டோ ஹைஜீனிக் வொயின் கம்பெனி லிமிட்டெட்.,
(உயர்ந்த பழரச பானங்களின் உற்பத்தியாளர்கள்)
தெஹிவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடத்துக்கு

தேவையான சிமந்தும்

மற்றச் சாமான்கள் எல்லாம்

எங்களிடம் குறைந்தவிலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

என். வயித்திலிங்கம் - கொம்பனி

No-38. மூன்றுங்குறுக்குத் தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.

டெலிபோன்: 2029 — டெலிகிராம். 'ENVAITLIN'

கிளை:- பெரியகடைத் தெரு,
யாழ்ப்பாணம் டெலிபோன்: 30.

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுகத் தேவையில்லை!

புதிய மதுரமான **ஆப்பிள்** பழங்கள்
கலிபோனியாவிலும், ஆஸ்திரேலியாவிலுமிருந்து
இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே
எங்கள் பந்தோபஸ்தான அறைகளில்
அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி
சேகரிக்கப்படுகின்றது.

ஜி. ஸி. ரூேச் அன் கோ.,
மலிபான் தெரு,
போன்: 2784 கொழும்பு 11 (தபாற்பெட்டி 243)

அறிவித்தல்

- சிமந்தி:
  இங்கிலீஷ், அமெரிக்கன், பெல்ஜியம்
- கெல்வனைஸ் நாகத் தகடுகள்
  8'X3'X24'-ம் 8'X3'X20'-ம்
- எஸபஸடொஸ சீலிங் தகடுகள்
  4'x4'-ம் 6'x3'-ம்
- கம்பி ஆணிகள்
  1", 1¼", 1½"-ம், 2"-ம்.
- தீந்தை டிஸடெம்பர் வார்னிஷுகள்
- பித்தளை, இரும்பு
- பித்தளையில் கதவு ஜன்னல்களுக்குரிய பூட்டு வகையருக்கள்
- குளிக்கிற அறைகளுக்குரிய சாமான்கள்
- டிரெய்னேஜ், பைப் முதலியவைகள்

இன்னும் கட்டிடங்களுக்கு வேண்டிய எல்லாவித சாமான்களும் இருப்பிலிருந்து கிடைக்கும்

மெஸ்க்கன் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ்,

165, ஆர்மர் வீதி, கொழும்பு.
தெ'போன்:- 4461. தந்தி விலாசம்: "மெஸ்க்கன்"
தபால் பெட்டி 826.

எவ்வித வைபவங்களுக்கும் எவ்வித விருந்துகளுக்கும் முற்றும பொருத்தமானது!

ஊக்கத்தையும் சந்தோஷத்தையும்
உண்மையாகக் கொடுக்கும்

சாஸ்திரீய முறையில் வடிக்கப்பட்டது. குளிர்ச்சியைக் கொடுக்கக் கூடியது.

தேச முழுவதும் யாவரும் விரும்பி பாவிப்பது.

தயாரிப்பவர்கள்:-
விற்ரோ ப்ரொடெக்ஸ் கம்பெனி லிமிடெட்.,
தெஹிவளை.

ஒரு சிறு குழாத்திடம் சிக்கியுள்ள இலங்கை அரசியல்

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

களின் தளமாக ஆக்கும் இரகசிய ஒப்பந்தத்தால் நம் எதிர்காலம் இருளடைந்து கிடக்கிறது. சமீபத்தில் டச்சு ஏகாதிபத்தியம் இந்தோனேஷியர்களை மீது புதிய தாக்குதல் ஆரம்பித்தது சம்பந்தமாக ஆசியாவில் அந்நியத் துருப்புகளை வைத்திருப்பதும், ராணுவ தளங்களை நிறுவுவதும் ஆசியாவின் சுயமரியாதைக்கும் சுதந்திரத்திற்கும் மாறானது என்று பண்டித ஜவஹர்லால்நேரு பிரகடனம் செய்தார். இந்த அறிக்கையிலுள்ள அகில ஆசியக் கொள்கை ஆசியாவில் உள்ள ஒவ்வோர் அரசாங்கத்தாலும் வரவேற்கப்பட்டிருக்கிறது. இலங்கையில் உள்ள யூ என் பி ஏகாதிபத்திய அரசாங்கம் மட்டுமே இதனை வரவேற்கவில்லை. இன்றும் டச்சு கப்பல்களும் விமானங்களும் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் அனுமதிக்க மறுக்கப்பட்டபின் "கீழத்தேச யூ என். பி சீனமான இலங்கையில் வரவேற்கப்பட்டு வருகிறது. ஆனால் அதைவிட படுமோசமான காரியத்தை யூ. என். பி தீர்மானித்துள்ளது. அது தேவ இங்கலாந்தின் கடல் தரை விமானத் தளமாக இலங்கையை ஆக்குவது. பர்மா, இந்தியா, பாகிஸ்தான் ஆகியவை சுதந்திரம் அடைந்தபின் எதற்காக இலங்கையில் விரிந்த துராணுவக் களம் நிறுவ பிரிட்டன் முயற்சிக்கிறது? குறித்த நாடுகளையோ எம்மையோ பாதுகாப்பது அதன் நோக்கமாய் இருக்க முடியாது. இந்தோ-தென்கிழக்காசியாவில் உள்ள சுதந்திர நாடுகளின் கடற்போக்கு வரத்து, பொருளாதார விரிவு முதலியவற்றை பயமுறுத்திக் கட்டுப்படுத்துவதே இதன் நோக்கம்.

சேனநாயக்கா வாக்குறுதி

லண்டனில் குடியேற்ற நாடு மந்திரியிடம் திரு. சேனநாயக்கா "இலங்கைக்கு ஒரு விதமான டொமினியன் அந்தஸ்து தந்து நமது கட்சி அதிகாரத்துக்கு வந்து விட்டால நானும் எனது மந்திரி சபை சகாக்களும் பிரிட்டனுக்கு இலங்கையில் உள்ள துறைமுகங்கள் விமான நிலையங்கள் ஆகியவற்றை உபயோகிப்பதில் உதவி புரிவோம்" என்றார். இப்போது பிரிட்டன் இந்து சமுத்திரத்திற்கும் வானுக்குமப் ஆழ்ந்துள்ள நிலத்துக்கும் அரசியாக பல காலத்துக்கு விளங்கி வர முடியும்" என்று கூறினார் என்பது எங்கள் எல்லோருக்கும் தெரியும்.

ஆசியாவுக்குத் தரோகம்

இந்த யூ என். பி கொள்கை இலங்கையை ஆசியாவின் தரோகி ஆக்கிவிடும். நமது நாடுகள் எல்லாம் ஆசியாவுக்கு எதிராகவும் ஆசியாவின் கரவுகள் எல்லாம் எமக்கெதிராகவும் திருக்கும் நிலையை உண்டாக்கிவிடும். ஆசியா இன்று விழித்து முன்னேறிக்கொண்டிருக்கிறது. ஒரு சில சுயநலக் காரணங்களுக்காக யூ என் பி நமது நாட்டைக் காட்டிக்கொடுக்கையில் நாம் அதனை ஆதரித்தால் நாம் அதோகதிஅடைக்கு தகுதியுள்ளவர்களே. இக்கொள்கையினால் 7000 மைலுக்கப்பால் இங்கிலாந்திலும், 4000 மைலுக்கப்பால் ஆப்பிரிக்காவிலும் 4000 மைலுக்கப்பால் ஆஸ்திரேலியாவிலும் இருக்கும் எமது சாம்ராஜ்ய சகாக்களுக்காக நாம நமது ஆசியத்தாய்நாட்டின் மீது தொடுக்கப்படும் மாத்ருத்துரோகயுத்தத்தில் சிக்குண்டு எம் அழகிய பூமி ரத்தக் களரியாகவும், எங்கள் குழந்தைகள் களப்பலியாகவும் போவதைக் காண நேரிடும்.

சோல்பரி ஆணையின் புதிய மேனுமினுக்கம்

தமிழ்க காங்கிரஸ் அவலட்சண ரூபிணியான சோல்பரித் திட்டமும், அதன் சமீபகால பாவி டொமினியன் அந்தஸ்து அல்லது இலங்கை சுதந்திர மசோதா என்னும் மனு மினுக்கமும் நமது நாட்டுக்குக் கெட்டதும், பொருத்தமற்றதுமான ஒரு மோச அரசியல் முறையைத் தருகிறது என்றே கூறிவந்தது; இன்றும் கூறுகிறது. நாம் இத் திட்டத்தையும் அதனை ஆதரிக்கும் யூ. என். பி. யையும் எதிர்த்தமை சிங்கள எதிர்ப்பு என்று எமது விரோதிகளால் திரித்துக் கூறப்பட்டது. அகில இலங்கை தமிழ்க காங்கிரஸின் லட்சியங்களும் நோக்கங்களும் முழுக்க முழுக்க தேசிய சார்வு தேசிய மனோபாவத்தைக் கொண்டது. யூ என். பி. முதலிய பஸதாபனங்களின் லட்சியமோ பூரண வகுப்புவாதக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இந்த அரசியற் சட்டமோசடியை நிராகரிக்க வேண்டும் எனவும் ஒரு அரசியல் நிர்ணய சபை மூலம் எமது அரசியலை உருவாக்க வேண்டும் எனவும் நாம முழங்குகிறோம்.

அதன் மூலமே இப்போ உள்ளதிலும் பார்க்க அதிக நேர்மையும் பொருத்தமும் கொண்ட ஜனநாயக அரசியல் திட்டத்தை உருவாக்கலாம்.

இலங்கைப் பொதுமக்களின் ஒவ்வோர் சாராருக்கும் ஒவ்வோர் மனிதனுக்கும் சுதந்தரமும் சுயமரியாதையும் அன்றாட வாழ்வில் அளிக்கக்கூடிய ஓர் அரசியல் திட்டம் வேண்டும்.

நமது சங்கல்பம்

இதனை ஒரே மத்திய அரசாங்க முறையால் அடைய முடியாவிட்டால பல கூட்டரசாங்கங்கள் கொண்ட சமஷ்டியை நாம் நிறுவ நேரிடலாம். இதுவே இன்று ரஷியாவிலும் அமெரிக்காவிலும் உள்ள முறை. ஒரே கலாசாரம் முதலியவற்றைக் கொண்ட ஒரே தன்மையான மக்கள் வசிக்கும் நாடடிலே ஜனநாயகம் என்பது பெரும்பான்மை ஆட்சி என்பதை நாம் அங்கீகரிக்கும் அதே சமயத்தில் பல வகுப்பினரைக் கொண்ட ஒரு நாடடில் ஜனநாயகத்தின் ஒரே அலுவல் சிறுபான்மைச் சமூகங்களின் சுதந்திரத்தையும் சுயமரியாதையையும் காப்பதே என நாம் கருதுகிறோம். பெரும்பான்மை எப்போதும் ஆட்சிசெய்யும். அதுவே ஜனநாயகதவம் அமுல் நடத்தும் ஓர் முற்போக்கான சோவியஸ் இலட்சியங்களைக்கொண்ட அரசாங்கம் நமக்கு வேண்டும். யூ. என். பி. யினதும் அதனது கையாட்களதும் நிர்வாகத் திறமையின்மை, ஊதாரித்தனமலஞ்சம், குடும்ப ஆட்சி முதலியவற்றுக்குச் சாவுமணி அடிக்க நாம் தீர்மானித்து விட்டோம். இந்தப் பணியிலே நாம் கண்பாகளை நாடி நிற்கின்றோம். நாடடின் தேச பக்தி நிறைந்த நேர்மையான முற்போக்காளருடன் இது விஷயததில் சேர்ந்து ஒத்துழைக்க நாம சபதம் ஏற்கிறோம்.

பாராளுமன்ற திறப்புவிழாவில் கவர்னர் பேசுவார்

வழி நெடுகிலும் துருப்புகள் அணிவகுப்பு

கொழும்பு, நவ 22

பிரதிநிதிகள் சபை, செனட் சபை ஆகியவை இரண்டும் 25-ம் தேதி பொது மண்டபத்தில் கூடியிருக்கும் பொழுதே த. கவர்னர் இரு சபைகளுக்கும் பொதுவான பிரசங்கத்தை நிகழ்த்துவார். இந்தினததன்று காலையில் கவர்னர் இராணி மாளிகையிலிருந்து புறப்படுகையில் ராயல் கடற்படை, தரைப் படை, விமானப் படையினர் வழிநெடுக அணிவகுத்து நிற்பர். காலை 10 மணிக்கு கவர்னர் பிரசங்கத்தை நிகழ்த்துவார். இவர் பிரதிநிதிகள் சபைக்கட்டிடத்துக்கு வந்ததும் 17 துப்பாக்கிகள் வெடி தீர்க்கப்படும்.

பாராளுமன்ற திறப்பு விழா வைபவம் முடிந்ததும் முதல் கவர்னரும் மூர் சீமாட்டியும் வெளியேறுவார். அதன் பின் மற்றவர்கள் ஒழுங்கு முறைப்படி வெளியேறுவர்,

கொட்டாஞ்சேனை உபதேர்தல்

கொழும்பு, நவ 22

கொழும்பு முனிஸிபல் சபை கொட்டாஞ்சேனை தொகுதி உபதேர்தல் டிஸம்பர் 13-ம் தேதி நடைபெறும். கதிரவேல் பெண் பாடசாலையிலும், சர்க்கார் மத்திய பாடசாலையிலும் வாக்களிக்கும் இடங்கள் ஒழுங்கு செய்யப்படுமென்று தெரிகிறது.

விகாரமகாதேவி இலங்கை வந்து சேர்ந்தது

கொழும்பு, நவ 2

ஹஜ்ஜி யாத்திரீகர்களை இலங்கையிலிருந்து ஏற்றிச்சென்று தருவதும் வழியிலிருந்து கராச்சியிலிருந்து செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த விகாரமகாதேவி தனது 15 பிரயாணிகளுடன் நேற்று மாலை 6-30 மணிக்கு முதலாவது வமான நிலையம் வந்துசேர்ந்தது

வெளிவந்துவிட்டது! — வெளிவந்துவிட்டது!!

"போட்டித் தூதன்"

தமிழ் விருத்திப் போட்டி நிர் 8ன் விடை — விமர்சனம்
"லோலன்" கூப்பன் சான்ஸ் "ஸ்ரீ லங்கா"
கூப்பன் செலக்ஷன் ஒரு விசேஷ அம்சம்
இன்றே எழுதுங்கள்! தனிப்பிரதி சதம்.
50 சதம் போஸ்டல் ஒர்டர் அனுப்பி ஒன்றை கடவைக்குரிய விமர்சனம் பெற்றுக்கொள்ளுங்கள்.

போட்டி லோலன் காரியாலயம், உடுவில் SPO

பிடிச் சக்கரவர்த்தி.

த.பி. செரக்கலால் ராம்சேட் பீடி

2 பீடி ரிங்லேபில்

சுய அறிவுப்போட்டி நிர். 21

கிறிஸ்மஸ் பரிசு ரூ. 3000-00

1-ம் பரிசு	ரூ. 1700-00	முடிவு தேதி	2-ம் பரிசு	ரூ. 500-00
3-ம் பரிசு	ரூ. 250-00	12-12-47	அதிர்ஷ்டப்பரிசு	ரூ. 350-00

1-ம் போனஸ ரூ. 100-00 — 2-ம் போனஸ ரூ. 50-00

அதிர்ஷ்டப் பரிசு ரூ. 100-00 ஒரே கவரில் அதிகக் கூப்பன் அனுப்புவோருக்கு போனஸ பரிசுகள் கொடுக்கப்படும்

1-ம் பரிசு பெறும் எல்லோருக்கும் ஒவ்வொரு **மதுரைத் தமிழ் பேரகராதியும்** முதற்பரிசிற்கு முதலில் ஆளாகுபவருக்கு ஒரு பார்க்கர் "51" பவுணடன் பேனாவும 1-ம் 2-ம் பரிசு பெறும எல்லோருக்கும் ஒவ்வொரு பவுண்டன் பேனாவும வழங்கப்படும்.

ஒவ்வொரு கூப்பனுக்கும் பிரவேசக்கட்டணம் சதம் 50. ரூ. 4-00 க்கு 16 கூப்பன்கள் அனுப்பலாம். 16 கூப்பனகளுக்கு மேற்படும ஒவ்வொரு கூப்பனுக்கும் சதம் 25.

கூபபன் மேலதிகமாகத் தேவையானோர் எமக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். காகிதத்தில் தயாரித்தும் விடையனுப்பலாம. போடடி ஆசிரியரின் விடை இந்தியன் ஓவர்ஸீஸ் வாரபில் டிப்பாசிட் செய்யப்பட்டிருக்கிறது. போட்டி ஆசிரியரின் விடையும் பரிசு பெற்றோர் விபரமும் 18-12-47ல் எம்மால் வெளியிடப்படும் "சுய ஜோதி" மாத சஞ்சிகை (தனிப்பிரதி சதம் 20)யில் வெளிவரும.

இடமிருந்து வலம்

1. இந்தப் பெயர் உடையவர்களெல்லோரும் சிலப்பதிகார நாளாசிரியராகவோ அன்றேல் சினிமாவுக்கு வசனமியற்றுபவராகவோ இருக்க முடியாது.
2. மிருக ராசா இது.
3. ஒருவரைப் பார்த்துச் சரியான ..... இவர் என்று சொல்லுவோம்.
5. நாம் உண்ணும் உணவு இதன் வழியாகச் செல்லும்.
6. வீட்டிறப்பு.
9. ஒரு காலத்தில் இலங்கையை ஆண்டானும் இவன்.
10. ஒரு மிருகம்.
13. மரத்திலிருந்து காய்ந்து உதிர்ந்த பின் இலைகளுக்கு இந்தப் பெயர் கிடைக்கும்.
14. மோட்ச நிலை.
15. தொழிலாளர் இதையுமோர் ஆயுதமாகப் பாவிப்பர்.

மேலிருந்து கீழ்

1. இசிற் பிறந்தவர்களென்று கீழாக மதிக்கும் வழக்கம் மக்களிடை முற்றாக நீங்கிவிடவில்லை.
2. 'சிமிழ்' என்றே கொடுக்கப்பட்டாய்விட்டதே!
4. 'சாதாரணம்' தான்.
7. மன்மதன் மனைவி.
8. சாமான்களை இதில் வைத்து நிறுத்துக் கொடுப்பார்கள்.
10. பெரும்பாலும் நெல் வயல்களை இது உடையதாகக் காணலாம்.
11. சமீபத்தில் மலை நாட்டில் ஏற்பட்ட இதனால் அநேக உயிர், பொருள சேதம் ஏற்பட்டது.
12. தவம் செய்பவன்.
13. பூமி.



தெளிவாய் எழுதுக.

பெயர் _____

விலாசம _____

_____

பணி ஆபீஸ்/போஸ்ட்/நிர் .....

கையொப்பம் _____

தேதி.....1947 போட்டி நிர் 21

சுய அறிவுப் போட்டிக் காரியாலயம்,
69, மலிபான் வீதி, தபால் பெட்டி 764.
கொழும்பு.

'Phone: 3032. — T gram: Shuyarivu" Colombo.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் தூதுகோஷ்டி மந்திரியை பேட்டி கண்டது

கொழும்பு, நவ. 22

இலங்கை ஆசிரியர்கள் லீக் தூது கோஷ்டி யொன்று திரு. எல். ஜி. மெதானந்தா தலைமையில் கல்வி மந்திரி திரு. ஈ. ஏ. நுகவெலயை பேட்டி கண்டது. பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்கும்படியான விஷயங்களை தூதுகோஷ்டியினர் மந்திரிக்கு எடுத்துக் கூறினர்.

ஜோகூரில் இலங்கையர் மரணம்

வாதுவை, நவ 22

ஜோகூரில் வாசஞ் செய்து வந்த திரு. எம் டபிள்யூ ஒவின்ஸ என்னும் இலங்கையர் காலஞ்சென்றுவிட்டதாக இங்கு ஓர் தந்தி கிடைத்துள்ளது.

இவருக்கு ஓர் மனைவியும், 5 புத்திரர்களும, ஒரு புத்திரியும் இருக்கின்றனர்.

உத்தரவின்றி மான் சுட்டுக் கொணடுவந்தார்

எதிரிக்கு அபராதம்

சாவகச்சேரி, நவ. 22

தன்னுலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை முருகேசு என்பவர் உத்தரவுமறி இரு மான்களைச் சுடுக் கொண்டுவந்ததாக பளை மணியகாரரால் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் எதிரிக்கு ரூ. 50 அபராதம் விதித்தார்.

இளவரசிக்கு 7000 வாழ்த்துத் தந்திகள்

ரொப்ளி ஹாம்ஷயர், நவ 21

பிலிப் இளவரசரும அவரது மனைவி எலிஸபெத் இளவரசியும இன்று ஒரு ஜீப் காரிலே தங்கள் புதுமண உலாச நாட்களைக் கழிக்கச் சென்றனர். அவர்களுக்கு இன்று 7000 வாழ்த்துத் தந்திகள் வந்துள்ளன.

(ராய்டர்)

நமது ஜோஸியப் பகுதி:

ராகு, கேதுகளின் மாற்றங்கள்

[சுகனயா எழுதுவது]

சர்வஜித்து வருஷார்த்திரை மீ 3-ம் தேதி (சனியான 1947-ம் ஆண்டு செப்டம்பர் மீ 18-ம் தேதி) ராகு மேட ராசிக்குள்ளும், கேது துலா ராசிக்குள்ளும் நுழைவார்கள்.

மேடம் பரிக்தானியா, ஜெர்மனியின் உதய ராசியாதலால மேட ராகு காலத்தில பிரிதானியாவில் உள்நாட்டுக் கிளர்ச்சிகளும் பொது ஜனங்கள் தொழிலாளர் கட்சியில் நம்பிக்கை குறைவுகளும், மந்திரி சபையில் சில மாற்றங்களும், தொற்று நோய்களால அநேக மரணங்களும், பஞ்சப் பிணியு முண்டாம பிரிததானியாவுக்கு அயல் நாடுகளின் பகைகளும் அயல்நாடுகளால் தொல்லைகளு மதிகரிக்கும்.

மேட ராகு காலத்தில் ஜெர்மனி பல தொல்லைகளுக்குள்ளாகும், ஜெர்மனியில் பல கிளர்ச்சிகளும், பஞ்சப் பிணியும், கொள்ளை நோய்கள் பரவுதலும், அயல் நாடுகளுடன் பகைகளும் உண்டாம். ஜெர்மனியில ரஷியாவுக்கு மாறான கருமங்கள் நடைபெறும். ஜெர்மனியின் தொல்லைகளும் நீடிக்கும.

துலாராசியின் கீழ் ஜப்பான் வருவதால் துலா கேது காலத்தல் ஜப்பானின் அதாமம் குறையும் சமயத்துடன் சம்பந்தப்பட்ட பல கருமங்கள் ஜப்பானில் நடைபெறும். ஜப்பானிலும் இடையிடையே பொது ஜனங்களுக்குள பீடைகளும், அந்நிய நாடுகளுடன் வியாபார ஒப்பந்தங்களும கைத்தொழில் கமத்தொழில விருத்திகளும உண்டாம்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கு மிடையி லேற்பட்ட தொல்லைகள் குறையும். துலா கேது காலததில் இவ்விரு நாடுகளுக்குமிடைகளில ஐக்கியமும் இவ்விரு நாடுகளின் பெண்மணிகள் முன்னிலையடைதலு முண்டாம்.

மேட ராகுகாலத்தில் ஐரோப்பிய நாடுகளில் வலது சாரிக கட்சிகள் பலமடையும். வலது சாரிக கட்சியின தலைவர்கள அரசாங்கங்களில் விசேஷ உருத்துகளெடுக்க வேண்டி நேரிடும் பொதுவாக உலக முழுவதல் விடுதலையும் மேட ராகு காலத்தில் நடைபெறும்.

இந்தவார தினப்பலன்

ஞாயிறு நவமபர் 23-இன்று பொதுக்கருமங்கள் ஆரம்பிப்பதற்கும், கொண்டாட்டங்களுக்கும் பொதுநாள்.

சந்திரலக்னம்-இடபம், மிதுனம், கன்னி, துலாம், மகரம் மீனராசிகளில்பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் விசேஷ பலனுண்டாம்

திங்கள்-நவம்பர் 24 இன்று மரவகை, செடிவகை நடுவுக்கும் வியாபாரம் புதுக்கணக்குப் பதிதலுக்கும கொண்டாட்டங்களுக்கும் விசேஷ நாள

சந்திரலக்னம்- இடபம், மிதுனம், கன்னி, துலாம், மகர மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இததினத்தில அனுகூலமுண்டாம.

செவ்வாய்-நவம்பர் 25 இன்று கொளளல விற்றலுகும, பொதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கும் பொதுநாள்.

சந்திரலக்னம்- இடபம், மிதுனம், கன்னி, துலாம், மகர மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இததினத்தில் நற்பலனுண்டாம.

புதன்-நவம்பர்26 பிரதோஷ விரதம. இன்று புதுக் கருமங்கள ஆரமபிப்பதற்கு தோஷமினம.

சந்திரலக்னம்-மேடம், மிதுனம, கடகம், துலாம், விருச்சிகம. கும்பராசிகளில் பிறந்தவர்களுக்கு இததினததில முன்னேறறமுண்டாம்.

வியாழன்-நவம்பர் 27-திருக்கார்ததிகை வரதம். இன்று புதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கு அநுபவனம்.

சந்திரலக்னம்- மேடம் மிதுனம, கடகம, துலாம் விருச்சிகம கும்பராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் பணம் பேறுண்டாம்.

வெள்ளி-நவம்பர் 28-பூரணை இன்று கொண்டாடடங்களுகும் பொதுக் கருமங்கள் ஆரமபிப்பதற்கும் பொதுநாள்.

சந்திரலக்னம்-இடபம், கடகம், சிங்கம், விருச்சிகம், தனுசு மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இததினத்தல வெற்றிகளுண்டாம்.

சனி-நவம்பர் 29 இன்று மரவகை செடிவகை நடுவதறகு வியாபாரம் புதுக்கணக்குப் பதிதலுக்கும் கொண்டாட்டங்களுகும் விசேஷ நாள.

சந்திரலக்னம்-இடபம், கடகம், சிங்கம், விருச்சிகம், தனுசு மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் ஜெயமுண்டாம்.

சிங்கள நாட்டுப் பாடல்கள்

இசைத்தட்டில் பதிவு

கொழும்பு, நவ. 22

இலங்கையின பல பாகங்களிலும பாமர பொதுமக்களிடையே நிலவிவரும் நாடடுப் பாடல்களை இசைததடடுகளில் பதிவு செய்ய ஏற்பாடாகியுள்ளது. இது சம்பந்தமாக டாகடர் ஜி. ஏ. மலலாளசேகரா, தேவர் ஆரியசேனா, முதலியார் அபயசேகர, கப்புக்கொடடுவா, முதலியோரின் உப கமிட்டி நியமிக்கப்பட்டுளளது. இசைத்தடடுப் பதிவு யந்திரங்களுடன் அவர்கள் கிராமந்தோறும் செல்வார்கள்.

கத்தியால் குத்த முயற்சித்தவருக்கு சிறைத் தண்டனை

மட்டக்களப்பு, நவ 22

ஏறாவூரில் உள்ள டி. கே. எச். முகமது என்பவரை கத்தியால் குத்த முயற்சித்ததாக அதே இடத்தைச் சேர்ந்த முகமது ஷெரீப் என்பவர் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மட்டக்களப்பு மாஜிஸ்டிரேட் திரு. ஸ்ரீ கந்தராஜா முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணை முடிவில் எதிரிக்கு 6 வாரச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தியத் தொழிலாளர் குடியேற்றக் கட்டுப்பாட்டு சபை

கொழும்பு, நவ 22

செனட் சபை அங்கத்தவர் திரு. பெரி சுந்தரமும் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. வி. ஈ. கே. ஆர். எஸ். தொண்டமானும் இந்தியத் தொழிலாளர் குடியேற்றக் கட்டுப்பாட்டு சபையின் அங்கத்தவர்களாக இம்மாதம் 1-ம் தேதி முதல் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மூன்று வருடங்களுக்கு இச்சபையில் சேவை புரிவர்.

தமிழ் விருத்திப் போட்டி நிர். 7

1-ம், 2-ம் அநுதாப, போனஸ் பரிசுகள் விபரம் 21-11-47 "வீரகேசரி"யில் வெளியிடப்பட்டது 3-ம் பரிசு பெற்றோர் விபரம் கீழ்வருமாறு:

இரு பிழைகளுடன் விடை அனுப்பியிருந்த கீழ்க்காணும் 250 அன்பர்களுக்குமிடையே 3-ம் பரிசுத் தொகையான ரூபா 250-00 ஐயும் சமமாய் பகிர்ந்து தலைக்கு ரூபா 1-00 வீதம் பரிசளிக்கப்படுகிறது.

திருவாளர்களான: 1. S. S. சுதந்திரன், யாழ்ப்பாணம். 2. M. S. கந்சையா, கல்முனை 3-37. S. பீதாமபர குருக்கள், பருத்தித்துறை. 38. A. V. கந்தையா [illegible] 39. N சாகல் கமீ [illegible] யாழ்ப்பாணம். 40-57. C. கனகசபை, பருத்தித்துறை. 58-61. J. [illegible] ரன், [illegible] 62 K [illegible] சாவகச்சேரி 63, S. வரத ராசா C/o ஐ [illegible] லம், [illegible] 64-65. P. R. செ[illegible] லம் ஆச்சாரி, பமபலபிட்டி 66. N. [illegible] மதது, கொழும்பு 67-72. M. S. A. முகைதீன் பிச்சை, யாழ்ப்பாணம். 73. K. வள்ளிப்பிள்ளை, பருத்தித்துறை 74-76. T. வடிவேல் ஆச்சாரி, நடுனவல 77-78. M. சுந்தரலிங்கம், நல்லூர் 79. P. ராம கிருஷ்ணன், யாழ்ப்பாணம். 80-81 V. A. சோமசுந்தரம், வண்ணாரபண்ணை, 82. V. சிவதபரம், தெவுஸ்[illegible]கை, 83-117. M. I. A. வடு[illegible], அமுகக[illegible] 118. P. J. [illegible], கலகிறநோயா 119-127. J. M. [illegible] சாகிபு, கொழும்பு 128. M. I. L. H. தாகா ஹெட்டி வதுதை 129-137. S. ஜ[illegible]ச்துரை, கொழுமபு 138. J. லுவிஸபசங்கா, நீர்கொழும்பு 139-145. S. P. T. பொன்னுதுரை, காலி 146. P. பெருமாள், [illegible]ண்டி. 147. J. லாசறஸ், கண்டி. 148-157. [illegible] ரகி, கொழும்பு. 158. N. தங்கையா நாடாரா[illegible]லங்கொடை. 159-160. P. [illegible]வாசன், நாபொட 161-162. J. [illegible]சமன் A. கத்தார், கந்தானை 163-166. A. R. M. சோமசுந்தரம், பதுளை. 167. V. கணபதி பிள்ளை, வாகைச்சேனை 168. N. பரமசாமி, சுவனுகம் 169-170. ப. மரேனுன்மணி மீரிகாமம். 171 M. [illegible] மூக்கு, பமபலப்பிட்டி 172. K. நடராசா நெலலந்தெனிபா. 173-174. M. K. அட்பிரகாசம், ஈச்சமடை 175. M. கந்தர், கொழும்பு. 176 I. A. [illegible]சரக்கிறனர், கொழும்பு 177-178. P. [illegible]பசாமி, தொளஸ்[illegible] 179-181 J. S. A. நாடார், கொழும்பு 182-186. J. A. பெ[illegible]னுதுரை, கொழும்பு 187-189. K. M. T. [illegible], [illegible]த்துறை. 190. V. N. [illegible]நாசன், கொழும்பு 191. V. S. [illegible]ணி கலமுனை 192-193 M. B. மணி, [illegible]பிட்டி 194. M. M. அபுசாலி, [illegible] 195-196. K. [illegible] மருதானை 197. S. [illegible]மணியன, [illegible]ச்சேரி. 198. N. முகைதீ[illegible], கொழும்பு 199. T. A. L. [illegible], சிலாபம் 200. M. V. சுப்பையா, எட்டியாந்தோட்டை 201. P. ராசையா, கொழும்பு 202. செல்வராஜ், V. T. கொழும்பு 203. A. நூர் முகம்மது [illegible], கொட்டகலை. 204-209. A. சிவலிங்கம், கொழும்பு 210-211. K. [illegible] 212-216. A P [illegible] 217. K. S. பாலசுந்தரம், நயினாதீவு 218-220. M. [illegible], சாவகச்சேரி 221. A. சுந்தரம், பொடடாகுளம், கொக்குவிலகபுரம 222. Miss [illegible] 223-224 [illegible] கந்தசாமி, கொழும்பு 225-246. A. [illegible]நாடார், கொழும்பு 247. K. கனகரத்தினம் நிவிட்டிகலா. 248-249. S. M. சாமி, கொழும்பு 250. செல்வி ரதிதினேஸவரி, பருத்தித்துறை.

1 இ	ள	ங்	கோ
		2 ஏ	ழு
3 பூ	க்	க	பை
	4 அ	ரை	சி
	5 மு	ச	ல்
6 தா	ரா	ள	ம்
	7 அ	ம்	பு
8 ச	ட	ட	ம்
	9 பூ	த	ம்
		10 ப	ல்

தமிழ் விருத்திப் போட்டி நிர். 8

பரிசு ரூபா 2000-00

1-வது பரிசு ரூபா 1000-00 1-வது போனஸ் பரிசு ரூபா 100 00
2 ,, ,, ,, 500-00 2-வது ,, ,, ,, 50 00
3 ,, ,, ,, 250-00 அநுதாபப் பரிசு ரூபா 100 00

சரியானவிடை: இலங்கை வங்கி கொழும்பு (BANK OF CEYLON COLOMBO) ல் டிப்பாசிட் செய்யப்பட்டுள்ளது. கூப்பன்கள் தனிக்காகிதத்திலும தயாரித்து அனுபபலாம். கூப்பன்கள் வேண்டியோர் எமக்கு எழுதுக. இலவசமாய அனுப்பி வைக்கப்படும்.

பிரவேசக் கட்டணம். ஒவ்வொரு கூப்பனுக்கும் சதம் 50 (அணா 8) ரூபா 4-00க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் கூப்பன்கள அனுப்புவோர், தாம் அனுப்பும் கூப்பன்களின் தொகையைப்போல் இன்னுமொரு மடங்கு பிரவேசக் கட்டணமினறி அனுப்பலாம். கட்டணம் போஸடல் ஓடர், மணிஓடராகவே இருக்க வேண்டும். தபால் முததிரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

1 சி	ங்	க	ம்
2 இ	ல		கை
	3 கு		ரி
4 ம	ந்		ரி
		5	ன
6 த		ம	ன்
	7 பு		ம்
	8	ண்	டி
		9	ஸ
10 சா	ம்	ப	

குறிப்புகள்:

1. இலங்கையின் தேசியக்கொடியை அலங்கரிக்கும் வனராசன்
2. நாமி நக்குர் நாடு.
3. அரச...யின் திருமணவைபவத்தைஅகிலஉலகும்எதிர்பார்க்கிறது
4. இந்த ஒருபதவியைப்பெற ஆலாய்ப்பறந்ததலைவாமார்எததனை.
5. இலங்கைக்காடுகளிலேஇதனதொகைகுறைந்துகொண்டு வருகிறதாம்.
6. ஒரு நோய்.
7. ஆண்களின் அழகை எடுத்துக்காட்டுவது இந்த உறுப்புத்தான்.
8. பாடு பூட்டி ஆழுக்கும் இதுக்கு மரியாதை போய்வட்டது.
9. அந்தி மவளையில் இதன் அழகே ஓர் அலாதிதான்.
10. கூடுப்பிலே அதிகம் இது இருந்தால நெருப்பு அவிந் விடும்.

முடிவு தேதி 12-12-47

சரியானவிடையும், பரிசு பெற்றோர் விபரமும் 19-12-47 வீரகேசரியிலும், 21-12-47 சுதந்திரனிலும் வெளியிடப்படும்.

தமிழ் விருத்திப் போட்டி நிர். 8
பெயர் _____
விலாசம் _____
P. O or M O No .....

இளங்கோவன் பதிப்பகம், 123, நோரிஸ் ரோடு, கொழும்பு.



வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!

"உங்கள் நேசன்"

தமிழ் விருத்திப் போட்டி நிர். 8ன் விடை விமர்சனம்

27 சதத்துக்கு முததிரைகள் அனுப்பி புக் போஸ்டில் பெற்றுகொள்ளுங்கள்.

"உங்கள் நேசன்" காரியாலயம்,
22, புதிய சோனகர் தெரு,
கொழும்பு

ஜிந்தும்பிட்டியில் இப்பொழுது

தினசரி மாலை 6 மணி, இரவு 9—30 மணிக்கு

புகழ்பெற்ற நடிகர்கள் நடிக்கும்

'விமோசனம்'

எனும் உயரிய தமிழ்ப்பேரும் படம் காண்பிக்கப்படும்

கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங்கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்த

கன்னிகா

தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்

என் எஸ் கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஏ வரதன் எம்.எஸ. சம்ராஜினி, எம். ஆர் சந்தானலக்ஷ்மி, காளி என் ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது!



முதல் நம்பர் நடிகர் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்

"இழந்த உறுதி"

என்னும் சிதர லாவின் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப்படம் காண்பிக்கப்படும்

28-11-47 புதன்கிழமை முதல் தினசரி மாலை 6-15 இரவு 9-30 மணி சனி- ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்

இலங்கையின் புதிய அந்தஸ்தும் நிதி நிலைமையும்

கொழும்பு நவ 22

"இலங்கை டொமினியனில நிதி நிலைமை" என்னும் விஷயமபற்றி திரு. என். மூ. ஜெயவர்தனா என்பவர் ராயல் எபபயா சொஸைட்டியில டிஸம்பர் முதல் வாரத்தில் பேசுவார் இக் கூட்டம் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும்.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் நவம்பர் மாதம் 23-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில அச்சிட்டு கொழும்பு மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org